திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாய காடு வளர்ப்புத் திட்டம் என்பது இன்று ஒரு நல்ல திட்டமாகயிருந்தாலும் கூட தமிழ்நாட்டில் வசிக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட மக்களை இது பெரிதும் பாதித்துள்ளது. அவர்களுக்கு சொந்த நிலம் கிடையாது. ஆங்காங்குள்ள புறம்போக்குகளில், ஏரிப்புறம்போக்குகளில் இவர்கள் 30, 40 சென்ட் நிலங்களில் பரம்பரையாக சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்களிடம் ரிக்கார்ட்ஸ் கிடையாது. அமைச்சர் அவர்கள், அவர்கள் பரம்பரையாக சாகுபடி செய்து வருவதை அல்லது செய்வதை நிரூபிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். எப்படி நிரூபிப்பது? அவர்களிடத்தில் ரிக்கார்ட்ஸ் கிடையாது. அவர்களுக்கு அனுபோகம் ஒன்றைத் தவிர வேறு ரிக்கார்ட்ஸ் கிடையாது. இன்று அவர்களெல்லாம் காட்டு இலாகா அதிகாரிகளிடம், தாசில்தார்களிடம் மனு கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் வேண்டாம், கேள்வியைக் கேளுங்கள்.

திரு என். பழனிவேல்: அந்த மனுக்களுக்கு பதிலேயில்லை. காட்டு இலாகா அதிகாரிகள் கன்றுகளை நட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்து கொடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்தச் சமுதாய காடு வளர்ப்புத் திட்டம் நம்முடைய மக்களுக்காகத்தான், மனித சமுதாயத்திற்காகத்தான். ஆகவே நாம் எல்லோரும் சேர்ந்து இதில் ஒத்துழைத்தால்தான் மரங்கள் வளரும், காடுகள் பெருகும், மழையும் வரும். ஆகவே ஆங்காங்கே சில தனிப்பட்டவர்கள் இடைக்காலத்தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அல்லது அனுபவித்துக்கொண்டிருக்கிற சில வசதிகளுக்கு சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். அதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து மாற்றுவழி கண்டுபிடித்தாக வேண்டும். அப்படி யாராவது ஏரிக்கரைகளில் அல்லது ஏரிக்குள்ளே புறம்போக்கு நிலங்கள் என்று ஆக்கிரமித்துக் கொண்டிருப்பார்களேயானால் அவர்களுக்கு வேறு இடங்கள் கொடுப்பதற்கும் வருவாய்த் துறையோடு கலந்து நாம் ஆலோசனைகள் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் நியாயமாக பாதிக்கப்படுகிற ஏழை எளிய மக்கள் குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் எங்கேயாவது இருந்தால் அவர்கள் உண்மையாகவே பாதிக்கப்படுகிறார்கள் தான் என்பதை எடுத்துச் சொன்னால் அரசாங்கம் தக்க வழியில் அவர்களுக்கு பரிகாரம் காண முயற்சிக்கும்.

*வினா எண் 6 திரு. இல. பலராமன்: மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் வனத்துறை புதிய காடு வளர்ப்பு திட்டத்தின் மூலம் எவ்வளவு கன்றுகள் எவ்வளவு ஏக்கரில் நடப்பட்டன?

1983 சனவரி 27] [திரு. இல. பலராமன்]

(ஆ) அதற்காக செலவழித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) 1981-82 ஆம் ஆண்டில் வடாற்காடு மாவட்டத்தில் சமூக நலக் காடுகள் மற்றும் இதர வன திட்டங்கள் மூலம் 8371 எக்டேரில் 1,08,98,026 செடிகள் ரூ. 79.92 லட்சம் செலவில் நடப்பட்டன. இதுவல்லாமல் 87 (கி.மீ) தொலைவுக்கு காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பெரும்பாலும் பொதுப் பணித்துறையைச் சேர்ந்த ஏரிகளில்தான் அதிகமாக கன்றுகள் நடப்படுகின்றன. கிராமங்களில் ஆடு மாடுகளை மேய்ப்பதற்கு இன்றையதினம் மேய்ச்சல் நிலங்களாக இந்த ஏரிகளைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆக, காடுகள் வளர்ப்பதால் இந்த மேய்ச்சல் நிலங்கள் பாதிக்கப்படுகின்றன, அதற்கு அரசு ஏதாவது மாற்று நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; நான் முதல் கேள்விக்கு பதிலளிக்கும்போது இதற்கானவிளக்கங்களை அளித்திருக் கிறேன். ஏரிகளிலே முக்கியமாக இந்த காடு வளர்க்கிற திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அங்கேதான் துரித மாக மரங்கள் வளர்கின்றன. அதுபோன்ற சூழ்நிலையில் ஆடுகள் அல்லது மாடுகளை மேய்ப்பதென்றால், ஒரு இரண் டாண்டுகள் அந்தச் செடிகள் வளர்ந்துவிட்டதற்குப் பிறகு அதற்குள்ளே மாடுகளை அல்லது ஆடுகளை அனுமதிப்பதில் தவறில்லை. ஆனால் துவக்கக் காலத்தில் அப்படிப்பட்ட பிரச்னை வருகிற நேரத்தில் நான் முன்பே சொன்னதுபோல் இது பொது நன்மைக்காகச் செய்யப்படுகிறது என்பதை எல்லோரும் உணர்ந்துகொண்டு கொஞ்சம் இருக்கிற இடங்களில் ஆடுமாடுகளை மேயவிட்டு—நாம் வீட்டில் ஒரு மரம், செடி வளர்த்தால் அதை எப்படி பாதுகாப்போமோ அதேபோல் நாட்டுக்காக வளர்க்கப்படுகிற மரங்களைப் பாதுகாக்கிற முயற்சியில் நாம் அனைவரும் ஈடுபட்டாகவேண்டும்.

(முற்பகல் 9.30)

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, நீண்ட நாட்களாக பயிர் செய்து கொண்டுவரும் விவசாயிகளுக்கு ஆக்கபூர்வமான பாதுகாப்பு அளிக்கப்படும் என்று சொன் னார்கள். ஆனால், இன்றைக்கு வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் நான் நேரில் சென்றிருந்தபோது, உண்மை யிலேயே எந்தவிதமான நிலமும் இல்லாதவர்கள் 1 ஏக்கர், 2 ஏக்கர்கள் வனத்துறைக்கு அடுத்துள்ள காடுகளிலே கடந்த 30, 40 ஆண்டுகளாக பயிர் செய்துகொண்டு வருபவர்களை வெளியேற்றி, அங்கே வனத்துறையைச் சார்ந்தவர்கள் கன்றுகளைப் பயிரிடுவதாக சொன்னார்கள். காடுகள் வளர்ப்பது என்பது அவசியம்தான். ஆனால், பஞ்சாயத்துக்

களிடமிருந்து விவரங்கள் கேட்டு' ஜமீன் காடுகளில், ஜமீன் ஒழிப்பிற்குப் பிறகு அந்த நிலங்களில் காடுகளை வளர்த்துக் கொண்டு வந்தார்கள். இப்படிப்பட்ட இடங்களில் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அரசாங்க அதிகாரிகளுக்குச் சரியான உத்தரவு பிறப்பித்து, அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்பே விரிவாக பதிலளித்து இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் தெரிவித்ததைப் போல், தர்மபுரி மாவட்டத்தில் இந்தமாதிரியான பிரச்னைகள் கொஞ்சம் அதிகமாக இருக்கின்றன. அதற்காகவே, வருவாய்த் துறை, வனத் துறை அதிகாரிகள் இணைந்து அந்த இடங்களை எல்லாம் பரிசீலனை செய்து நியாயமாக, நீண்டகாலமாக அந்தப் பகுதிகளிலே வாழ்கின்றவர்களுக்கு அந்த உரிமைகள் எல்லாம் கிடைக்க, பல பகுதிகளை வன நிலம் என்கின்ற அந்த அறிவிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இப்படி உண்மையான வேண்டுகோள் வருகின்ற நேரத்தில், அதைத் தீவிரமாக விசாரித்து, ஏழை எளியவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சமுதாய காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் வட ஆற்காடு மாவட்டமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த மாவட்டமாக இருந்தாலும் சரி, அவர்களை நியமிக்கின்ற முறை சரியான முறையில் இல்லாதது அரசாங்கத்திற்குத் தெரியுமா? சில சந்தர்ப்பங்களில் ஒரு மாதம், இரண்டு மாதங்கள் பணியாற்றிக் கொண்டிருந்தவர்களை போகச் சொல்லிவிட்டு, வேறு ஒருவரைப் போடுவதும், அதுவும் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் இருந்து எடுக்காமல், தங்களுக்கு விருப்பப்படுகின்றவர்களை ரேஞ்ச் ஆபீசர்களாக நியமிப்பதும் அரசுக்குத் தெரியுமா? இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது சமுதாய காடுகள் வளர்ப்புத் திட்டத்திற்குப் பதிலளித்துக் கொண்டிருக்கிறேன். இதிலே அலுவலர்கள் நியமிக்கும் முறையைப் பற்றி தகவல் அறிய விரும்புகிறீர்கள். இதுகுறித்து, தனிக்கேள்வி போட்டால், அதுபற்றி விரிவாக பதிலளிக்க முடியும்.